1978 மார்ச் 10]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அப்படி ஏற்பட்டால் சென்னையில்தான் அதற்கான எல்லா வசதிகளும் இருக்கின்றன. பல்கலைக் கழகத்தின் தலைமையிடம் சென்னையில்தான் அமையும்.

தஞ்சை மாவட்டத்திற்குப் பொறியியல் கல்லூரி

*312 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் ஓர் பொறியியல் கல்லூரி ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

அம்பாசமுத்திரம் பேரூராட்சி மன்றம்

*313 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் பேரூராட்சி மன்றத்தின் தலைவர், 26—9—1970 தேதியில் பெண் உறுப்பினர் தேர்தல் நடத்தி, பெண் உறுப்பினரைத் தேர்ந்து எடுத்தது செல்லாது என கோர்ட்டில் தீர்ப்பளிக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) அம்பாசமுத்திரம் பேரூராட்சியில் 26—9—1970-ல் நடந்த பெண் உறுப்பினர் தேர்தல் கூட்டத்தில் திருமதி சண்முகவடிவு அம்மாள், 9 ஓட்டுகளும், மற்றொருவரான திருமதி மாகதம்மாள் 7 ஓட்டுக்களும் பெற்றிருப்பதாகவும், ஆகவே, திருமதி சண்முகவடிவு அம்மாள் தேர்ந்தெடுக்கப் பட்டதாக, பேரூராட்சியின் தலைவர் அறிவிக்க, இத்தேர்தலை எதிர்த்துப் பேரூராட்சியின் உபதலைவரும், மற்றும் ஏழு உறுப்பினர்களும் வழக்குப் போட்டார்கள். திருமதி சண்முகவடிவு அம்மாளும், திருமதி மரகதம்மாளும், முறையே எட்டு ஓட்டுக்கள் பெற்றிருப்பதால் திருமதி சண்முகவடிவு அம்மாளைத் தேர்ந்தெடுத்தது செல்லாது எனவும் சட்ட திட்டங்களுக்குட் பட்டுப் புதிய பெண் உறுப்பினர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் எனவும் அம்பா சமுத்திரம் மாவட்ட முன்சிப் கோர்ட்டில் தீர்ப்பளிக்கப்பட்டது.

திரு. ச. சங்குமுத்து தேவர் : இதுமாதிரி தலைவர் நடத்திய தேர்தல் உண்மைக்குப் புறம்பானது என்று மாவட்ட ஆட்சித் தலைவருடைய கவனத்திற்கு உடனடியாகக் கொண்டுவரப்பட்டும், உடனடியாகக் கவனிக்கப்படாததாகத் தெரிகிறதே அதுகுறித்து அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்ததா? தேர்தல் நடத்திய தலைவர் யூனியன் தலைவராக இருந்து அவர்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தால் அரசு அனுமதி பெற்றுத்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற விதிமுறை ஏதாவது இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஓட்டு எடுத்ததில் திருமதி சண்முகவடிவு அம்மாள் 9 ஓட்டுகள் பெற்றிருப்பதாகவும், மற்றொருவரான திருமதி மரகதம்மாள் ஏழு ஓட்டுகள் பெற்றிருப்பதாகவும், ஆகவே, திருமதி சண்முகவடிவு அம்மாள் தேர்ந்தெடுக்கப்பட்டதாகத் தலைவர் அறிவித்தார். அம்பாசமுத்திரம் மாவட்ட முன்சிப் கோர்ட்டில், திருமதி சண்முக வடிவு அம்மாளும், திருமதி மரகதம்மாளும் ஆளுக்கு எட்டு ஓட்டுகள் பெற்றிருப்பதால் திருமதி சண்முகவடிவு அம்மாள் தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது என்றும், மறு தேர்தல் நடத்துமாறும் தீர்ப்புக் கூறினார்கள். அத்தீர்ப்புக் கிணங்க அம்பாசமுத்திரம் பேரூராட்சியின் 30—8—1972-ம் தேதிய விசேஷக் கூட்டத்தில் திருமதி மரகதம்மாள் ஏகமனதாகப் பெண் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அதற்குப் பிறகு, அந்த ஓட்டு எண்ணிக்கையில் நடந்துள்ள தவறுதலுக்காகத் தலைவர்மீது குற்ற வழக்குத் தொடர வேண்டும் என்று அனுமதி கோரப்பட்டது. அதன்பேரில் மாவட்ட ஆட்சியாளர் தமது கடிதத்தில் உப தலைவரை அவர்கள் சம்பந்தப்படுத்தவில்லை என்றும், தலைவருக்குத் தன்னைக் காத்துக்கொள்ள தக்க வாய்ப்பு அளிக்கப்படாததாலும், மேலும் மாவட்ட முன்சிப் தமது தீர்ப்பில் தலைவர்மீது எந்தக் குற்றச்சாட்டும் சுமத்தாததாலும் மேற்படி பேரூராட்சித் தலைவர்மீது குற்ற வழக்குத் தொடரப் போதிய காரணம் இல்லை என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார். மாவட்ட ஆட்சியாளரின் அறிக்கையினை சட்டத் துறையின் ஆலோசனையுடன் பரிசீலனை செய்ததில் அம்பாசமுத்திரம் பேரூராட்சித் தலைவர் பெண் உறுப்பினர் ஒருவரைச் சேர்த்துக்கொள்வதற்கு நடந்த கூட்டத்தில் பெண் உறுப்பினர் தேர்ந்தெடுத்ததைத் தவறுதலாக அறிவித்தது ஊராட்சிகள் சட்டத்திற்குக் கீழோ அல்லது இந்தியக் குற்றவியல் சட்டத்தின் (ஐ.பி.சி.) கீழோ நடவடிக்கை எடுக்கத்தக்க குற்றம் அல்ல என அறிவித்ததால் மேல் நடவடிக்கைகள் கைவிடப்பட்டன.

1973 மார்ச் 10]

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, தேர்தல் சம்பந்தமாக இப்படித் தவறான தகவல்களைத் தெரிவித்த அந்தத் தலைவர்மீது எலெக்ஷன் சட்டப்படியாவது நடவடிக்கை எடுப்பதற்கு என்ன சங்கடம் ஏற்படும் என்று அறிவிக்கலாமா, தவறு பீனல் குற்றம் இல்லையென்றாலும், எலெக்ஷன் குற்றம் என்ற முறையில் அவரை 'டி-பார்' செய்யவோ அல்லது வேறு விதமான பனிஷ்மென்ட் கொடுக்கவோ என்ன சங்கடம் இருக்கும் என்பதை அமைச்சர் தெரிவிப்பாரா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: சட்டப்படி ஆராய்ந்து சட்டத்துறை இந்தக் கருத்தினை அறிவித்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோன்று அப்படிப்பட்ட ஒரு விண்ணப்பம் வந்தால் அதற்கு வாய்ப்பு இருக்கிறதா, ஆதாரம் இருக்கிறதா என்று வேண்டுமானால் ஆராய்ந்து பார்க்கலாம்.

திரு. ச. சங்குமுத்து தேவர்: தலைவர் அவர்களே, சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்காக அரசு அனுமதி கேட்டு ஒரு வேண்டுகோள் கூட்டம் கூட்டி, உறுப்பினர்கள் அரசு அனுமதி பெறுவதற்காகக் கோரிக்கை ஏதாவது அனுப்பினார்களா? அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய அறிக்கையும் மற்றவர்களுடைய கோரிக்கைகளும் சட்டத் துறையால் ஆராயப்பட்டு, ஊராட்சிச் சட்டத்தின் கீழோ, இந்தியக் குற்றவியல் பிரிவின் கீழோ, நடவடிக்கை எடுக்கத்தக்கது அல்ல என்று நடவடிக்கை எடுக்கப்படவில்லை. வேறு வழிகள் இருந்தால் ஆராயப்படும்.

திரு. ஏ. சுவாமிதாஸ்: ஊராட்சிமன்றத் தலைவர் அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றிய குறிப்பு என்னிடம் இல்லை, தனிக் கேள்வி போட்டால் விவரம் அறிந்து சொல்லப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்தியன் பீனல் கோடில் இந்தமாதிரித் தேர்தல் சம்பந்தமாக அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு செக்ஷன்களும் இருக்கின்றன, ஆதலால் அந்தப் பிரிவினை மறுபடியும் அரசு பரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தியக் குற்றவியல் பிரிவினை ஆராய்ந்ததற்குப் பிறகுதான் சட்டத்துறை இந்த யோசனையை அரசுக்கு அளித்திருக்கிறது.

திரு. த. சோனையா : தலைவர் அவர்களே, முதலில், 7-ம் 9-ம் இருந்த தாகவும், அதை 8-ம் 8-மாக ஆக்கினார்களென்றும் கூறும்போது, தீர்ப்பில், நடந்த தவறுக்குக் குறிப்பு ஏதாவது எழுதப்பட்டிருக்கிறதா என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த முன்சீப் கோர்ட் தீர்ப்பிலே, தலைவர்மீது எந்த குற்றச்சாட்டும் சுமத்தவில்லை யென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

பெண்கள்-குழந்தைகள் மருத்துவ மனை

* 314. வினா—**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை எழும்பூரில் உள்ள பெண்கள்-குழந்தைகள் ஆஸ்பத்திரி எப்போது கட்டப்பட்டது ?

(இ) எத்தனை படுக்கை வசதி உள்ளது ?

(உ) அதை விரிவுபடுத்திக் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) 1882-ம் ஆண்டில் கட்டப்பட்டது.

(இ) 494 படுக்கைகள்.

(உ) இது மருத்துவக் கல்வி இயக்குநரின் பரிசிலனையில் உள்ளது.

திரு. கே. எ. வகாப் : சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு 400 படுக்கை வசதி களோடு கட்டப்பட்டது. ஆனால் இன்றைக்கு ஏறத்தாழ ஆயிரம் பேஷண்டு கள் சேர்க்கப்படுகிறார்கள். எப்படிக் குடும்பக் கட்டுப்பாட்டை அதிகமாக வற்புறுத்துகிறோமோ, அதேபோல் குழந்தை பிறப்பதற்கும் வசதி செய்து தர இதை விரிவுபடுத்த அரசு முயற்சி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, 1882-ம் ஆண்டு மருத்துவமனை கட்டப்பட்டது. 494 படுக்கைகளும் அப்பொழுதே கொடுக்கப் பட்டவை அல்ல. பல ஆண்டுகளாக வளர்ந்துதான் தற்போதுள்ள படுக்கை எண்ணிக்கை 494-ஆக உயர்ந்திருக்கிறது. அந்த எண்ணிக்கை முழுவதுமே அப்பொழுதே அமைக்கப்பட்டது என்று கருதக் கூடாது.